**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 68/2025**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 12.11.2025.**

| | |
|---|---|
| **Name : சந்தோஷ்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஆட்டுக்காரனூரில் குடியிருந்து துணி கடை நடத்தி வருகிறேன். விபத்தில் இறந்தது என் தாத்தா கந்தசாமி. கடந்த 05.12.2024 ம் தேதி காலை வழக்கம் போல் நான் துணிக்கடைக்கு சென்ற சமயத்தில் காலை 9 மணிக்கு என் உறவினர் சேவி என்பவர் எனக்கு போன் செய்து தாத்தாவிற்கு விபத்து ஏற்பட்டதாக சொன்னார். அன்றையதினம் காலை 08.15 மணிக்கு என் தாத்தா செந்தில் தியேட்டர் அருகில் உள்ள பீடா கடைக்கு செல்ல நடந்து கடந்து சென்ற போது ஜலகண்டாபுரத்திலிருந்து நங்கவள்ளி நோக்கி சுசீக்கி இரு சக்கர வாகனத்தை அதன் ஓட்டுநர் ஓட்டி வந்து தாத்தா மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார்.

2) என் தாத்தாவிற்கு விபத்தின் காரணமாக பின் தலை, முட்டி, வலது கை ஆகிய பகுதியில் காயம் ஏற்பட்டு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் முதலில் ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று முதலுதவி சிகிச்சை பெற்று பிறகு மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தார்கள். அன்றையதினம் மதியம் 2 மணி சுமாருக்கு சிகிச்சை பலனின்றி என் தாத்தா இறந்துவிட்டார். இது சம்மந்தமாக நான் காவல் நிலையம் சென்று புகார்மனு கொடுத்தேன். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதான்

அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **புகார் மனு அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3) சேவி என்பவர் எனக்கு போன் மூலமாக விபத்து பற்றி தகவல் தெரிவித்தார். புகாரை யார் எழுதினார்கள் என்றால் என் சித்தப்பா தனபால் என்பவர் எழுதினார். யார் யார் கையொப்பம் செய்தோம் என்றால் அதில் நான் மற்றும் என் சித்தப்பா, மாரியப்பன் ஆகியோர் கையொப்பம் செய்தோம். யார் யார் கையொப்பம் செய்தோம் என்று தெரியவில்லை. மொத்தம் 5 பேர் கையொப்பம் செய்தோம். விபத்து ஏற்படுத்திய இரு சக்கர வாகன பதிவெண் மற்றும் ஓட்டிய நபரை தெரியாது என்றால் ஆமாம். கையொப்பம் செய்ததில் மற்றும் போலீசார் விசாரணையில் வாகன பதிவெண் சொல்லவில்லை என்றால் ஆமாம்.

4) நான் சொல்லி என் சித்தப்பா எழுதவில்லை என்றால் ஆமாம். அவர் எழுதியதில் நான் கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும் போது விசாரித்தார்கள். அதன் பின்னிட்டு விசாரிக்கவில்லை என்றால் ஆமாம். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.13 15:15:40 +0530

Judicial Magistrate No.II,
Mettur.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 68/2025**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 12.11.2025.**

| Name : தங்கவேல் | Taluk : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஆட்டுக்காரனூரில் குடியிருந்து தறி ஓட்டி வருகிறேன். விபத்தில் இறந்தது என் சித்தப்பா கந்தசாமி. கடந்த 05.12.2024 ம் தேதி காலை 08.00 மணிக்கு என் சித்தப்பா செந்தில் தியேட்டர் அருகில் டீ குடிப்பதற்காக நடந்து கடந்து சென்ற போது ஜலகண்டாபுரத்திலிருந்து நங்கவள்ளி நோக்கி இரு சக்கர வாகனத்தை அதன் ஓட்டுநர் ஓட்டி வந்து சித்தப்பா மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார்.

2) என் சித்தப்பாவிற்கு விபத்தின் காரணமாக பின் தலை, முட்டி, வலது கை ஆகிய பகுதியில் காயம் ஏற்பட்டு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் முதலில் ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று முதலுதவி சிகிச்சை பெற்று பிறகு மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தார்கள். அன்றையதினம் மதியம் 2 மணி சுமாருக்கு சிகிச்சை பலனின்றி என் தாத்தா இறந்துவிட்டார். பிரேத பரிசோதனையின் போது நான் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் ஆமாம். ஆனால் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். இறந்தவர் ரோட்டை கடந்த போது விபத்து ஏற்பட்டதாக

கேள்விப்பட்டேன் என்றால் ஆமாம். இடித்த வண்டி எண் தெரியாது என்றால் ஆமாம். நான் கேள்விப்பட்டது போல் கேள்விப்பட்ட விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.13 15:15:45 +0530

Judicial Magistrate No.II,
Mettur.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 68/2025**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 12.11.2025.**

| | |
|---|---|
| **Name : சேவி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஆட்டுக்காரனூரில் குடியிருந்து ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்தது என் மாமா ஆவார். கடந்த 2024ம் வருடம் காலை 08.15 மணிக்கு நான் கடைக்கு செல்வதற்காக நானும் என் நண்பர் பொட்டிக்கடை அருகே சென்ற போது சுசீக்கி இரு சக்கர வாகனம் அரசமரத்திலிருந்து நங்கவள்ளி நோக்கி வந்த போது என் உறவினர் இடது பக்கத்திலிருந்து வலது பக்கமாக கடைக்கு செல்லும் போது மோதியதால் விபத்து ஏற்பட்டது. சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன்.

2) என் மாமாவிற்கு விபத்தின் காரணமாக பின் தலை, கால், மூட்டுக்கு கீழ், வலது கை ஆகிய பகுதியில் காயம் ஏற்பட்டு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் முதலில் சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்த போது அன்றையதினம் மதியம் 2 மணி சுமாருக்கு சிகிச்சை பலனின்றி என் மாமா இறந்துவிட்டார். இரு சக்கர வாகன ஓட்டுநரை நான் பார்த்தேன். தற்போது பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும். ஆஜர் எதிரி தான் ஓட்டுநர் என சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) விபத்தில் இறந்தவர் பெயர் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். என்னுடன் இருந்த நண்பர் பெயர் தெரியாது என்றால் ஆமாம். எவ்வளவு நேரம் கழித்து சம்பவயிடத்திற்கு சென்றேன் என்றால் அடித்தவுடன் ஓடிச் சென்று பார்த்தேன். நான் இரு சக்கர வாகனத்தில் சென்றேனா என்றால் நடந்து சென்றேன். விபத்தில் இறந்தவர் சாலையை கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் ஆமாம். சாலையை கடக்காமல் இருந்திருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் ஆமாம்.

4) விபத்து நடந்த சமயத்தில் யார் யார் அங்கிருந்தோம் என்றால் கூட்டமாக இருந்தது. கூட்டத்தில் இருந்தவர்கள் பெயர் நினைவில்லை. மறுநாள் காவல் நிலையத்தில் போலீசார் விசாரித்தனர். மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி தான் சாலையை கடந்தார் என்றால் ஆமாம். போலீசார் விசாரித்த போது நான் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி கடந்ததாக சொன்னேன் என்றால் ஆமாம். உறவு முறையான ஒரு நபருடன் நான் சம்பவம் நடந்த இடத்திற்கு சென்றதாக போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் இல்லை.

5) அவ்வாறு நான் உறவு முறை ஒருவருடன் நின்று கொண்டிருந்ததாக சொல்வது தவறு என்றால் சரிதான். நான் சொன்னவாறு சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையில் வாகன ஓட்டுநர் பெயர் சொன்னேனா என்றால் இல்லை. விபத்தில் இறந்தவரின் மீது இரு சக்கர வாகனத்தின் எந்த பாகம் மோதியது என்பதை பார்த்தேனா என்றால் இடித்து விழுந்தவுடன் தான் நான் பார்த்தேன். இரு சக்கர வாகன ஓட்டுநர் குழந்தையை பள்ளிக்கு விட வந்தவர் என்றால் ஆமாம். குழந்தையுடன் தான் இரு சக்கர வாகனத்தில் எதிரி வந்தார் என்றால் ஆமாம். போன் மூலமாக நான் யாருக்காவது தகவல் சொன்னேனா என்றால் நான் சந்தோஷ் என்பவருக்கு தகவல் சொன்னேன். சந்தோஷ் என்பவர் எனக்கு பழக்கமா என்றால் ஆமாம். நான் சம்பவயிடத்தில் இல்லாமல் பொய்யாக உறவினர் என்பதால் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.13 15:15:51 +0530

Judicial Magistrate No.II,
Mettur.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 68/2025**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 12.11.2025.**

| | |
|---|---|
| **Name : சக்திவேல்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஆட்டுக்காரனூரில் குடியிருந்து மேஸ்திரியாக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்தது என் தாத்தா ஆவார். கடந்த 05.12.2024ம் வருடம் காலை 08.30 மணிக்கு நான் மற்றும் சேவி இருவரும் ஆட்டோ ஸ்டான்டு அருகே நின்ற போது என் தாத்தா கடையிலிருந்து இருபுறமும் பார்த்துவிட்டு சாலையை கடந்து முடித்த போது ஸ்கூட்டி வாகனம் ஜலகண்டாபுரம் சாலையிலிருந்து நங்கவள்ளி நோக்கி வேகமாக ஓட்டி வந்து மோதியதால் விபத்து ஏற்பட்டது. சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன்.

2) என் தாத்தாவிற்கு விபத்தின் காரணமாக பின் தலை, கால், மூட்டுக்கு கீழ், வலது கை ஆகிய பகுதியில் காயம் ஏற்பட்டு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் முதலில் ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று பிறகு சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்காக சேர்த்த போது அன்றையதினம் மதியம் 2 மணி சுமாருக்கு சிகிச்சை பலனின்றி என் தாத்தா இறந்துவிட்டார். இரு சக்கர வாகன ஓட்டுநரை நான் பார்த்தேன். தற்போது பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும். ஆஜர் எதிரி தான் ஓட்டுநர் என சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) மறுநாள் போலீசார் காவல் நிலையத்தில் என்னை விசாரணை செய்தனர். விபத்து நடந்தவுடன் சத்தம் கேட்டு சென்று பார்த்தேன். ஆட்டோ ஸ்டான்டு அருகே நான் நின்றிருந்தேன். சேவியும் நானும் சத்தம் கேட்டு விபத்து நடந்த இடத்திற்கு சென்றோம். நாங்கள் சென்று சிறிது நேரம் கழித்து நடேசன் அங்கு வந்தார். எப்படி இடித்தது என்பதை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் சென்ற போது தாத்தா கீழே கிடந்தார். சேவி என்பவரும் சத்தம்கேட்டு தான் என்னுடன் வந்து பார்த்தார்.

4) ஆட்டோ ஸ்டாண்டு பக்கமிருந்து எதிர்புறமாக என் தாத்தா சாலையை கடந்தார். ஆஜர் எதிரி சரியான பாதையில் சென்றார் என்றால் ஆமாம். எதிரியின் பெயர், முகவரி தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் விசாரணையிலும் தெரியாது என்று தான் சொன்னேன். வாகன பதிவெண் தெரியாது என்றால் ஆமாம். போலீசார் விசாரணையில் வாகன பதிவெண் சொல்லவில்லை என்றால் ஆமாம்.

5) நான் சொல்வது போல் சொல்லும் விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் ஆஜர் எதிரியின் அஜாக்கிரதையால் விபத்து ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.13 15:15:58 +0530

Judicial Magistrate No.II,
Mettur.